35 இலட்சம் ரூபாயை இதற்கு அனுமதித்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல தண்ணீரின்றி இருக்கின்ற குளங்களையெல்லாம் அரசு செலவில் செப்பனிட வேண்டுமென்றால் அது அரசின் நிதி நிலையைப் பொறுத்துத் தான்சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், கபாலீஸ்வரர் கோயில் குளத்தைப் பற்றிக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபொழுது, சுற்றியிருக்கக்கூடிய காய்கறிக் கடைக்காரர்கள் அழுகிப் போனதையெல்லாம் போட்டு விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அடுத்து, குளங்களிலே தண்ணீர் இருக்கும்போது பிள்ளையார் சதுர்த்தி வருகின்ற பொழுதெல்லாம் பிள்ளையாரைக் கொண்டு போய் போட்டு குளத்தைத் தூர்த்துவிடுகிறார்கள். எல்லா ஊர்களிலும் இந்த மாதிரிச் செய்கிறார்கள். இதுபோன்று குளங்களைத் தூர்க்கின்ற, தண்ணீரை அசுத்தப் படுத்துகின்றவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரை அசுத்தப்படுத்துகிற ஒவ்வொருவர் மீதும் நடவடிக்கை எடுப்பது என்பது சாத்தியமல்ல. அதனால்தான் இந்தக் குளங்களைச் சுற்றியுள்ள காய்கறிக் கடைகளை அப்புறப்படுத்தி மாற்று இடத்தில் அந்தக் கடைகளை வைக்க ஏற்பாடு செய்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

22 —

மின்னணு தொழில் நகரம்.

*10568 — திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சோழிங்கநல்லூரில் அமையவிருக்கும் மின்னணு தொழில் நகரம் எந்த நிதியாண்டில் முடிவடைந்து உற்பத்தியைத் தொடங்கும்?

1992 செப்டம்பர் 22]

(ஆ) இத்தொழில் நகரில் உற்பத்தி செய்யவிருக்கும் மின்னணுக் கருவிகளின் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சுமார் ரூ. 40 கோடி செலவில் ஓர் மின்னணு தொழில் நகரத்தை சென்னையை அடுத்த சோழிங்க நல்லூரில் சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது. மேலும் மத்திய அரசு அறிவித்தபடி மின்னணு கணிப்பொறி தொழில் நுட்பவியல் வளாகம் (Electronic Hardware Technology Part) ஒன்றினையும், இத்திட்டத்தின் கீழ் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுமார் 18 மாதங்களில் இத்திட்டத்திற்கான நிர்மாணப் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழில் நகரில் பலதரப்பட்ட மின்னணுக் கருவிகளான கம்ப்யூட்டர்கள், தொலை தொடர்புச் சாதனங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள் Control Devices போன்றவைகளுடன் பலதரப்பட்ட மின்னணு பாகங்களும் தனியார் கூட்டுத்துறை மற்றும் இணைத்துறை, அதாவது Associate Sector நிறுவனங்களால் தயாரிக்கப்படும்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வத்தினுடைய சீரிய சிந்தனையால் உருவாகிவரும் புரட்சிகரமான திட்டமாகிய சோழிங்க நல்லூர் மின்னணு தொழில் நகரம்—அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பது 'முதுமொழி'. ஆனால் எதிர்காலத்தில் மின்னணு இன்றி எதையும் அமைக்க முடியாது என்பது 'புதுமொழி'. எனவே, இது போன்ற சீரிய திட்டத்தினை நமது தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மின்னணு தொழில் நகரம் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 40 கோடி ரூபாய்ச் செலவில் இந்த மின்னணு தொழில் நகரம் (Electronic City) அமைக்கப்படவுள்ளது என்று சொன்னேனே, இத்தகைய தொழில் நகரம் தமிழகத்தில் முதன்முறையாக நிறுவப்படுகிறது. இதுவே மிகப் பெரிய Electronic City ஆகும். எனவே, இதை முடித்தாலே ஆரம்பத்தில் ஆண்டுக்கு 250 கோடி ரூபாய் விற்பனை இருக்கும் என்றும், சுமார் 10 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த Electronic City நிறுவி முடித்த பின்னர், மற்ற இடங்களில் நிறுவுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தவறு செய்தவன் திருந்தியாகணும், தப்பு செய்தவன் வருந்தியாகணும்' என்ற தாரக மந்திரத்தைக் கையாண்டு வரும் எனது இதய தெய்வம், தென்னார்க்காடு மாவட்டத்திலே தொழிற்துறையில் பின்தங்கிய எனது சின்னசேலம் தொகுதியில் அதற்கு முன்னுரிமை கொடுத்து, இந்த மின்னணு தொழில் நகரத்தைத் துவக்க.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படுமா என்பதற்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இது முடிந்து வெற்றிகரமாக நடந்ததற்குப் பின்னர் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது நீங்கள் குறிப்பிட்ட இடத்தில் கேட்கிறீர்கள். அது சம்பந்தமான கேள்வியாகக் கேட்கலாம்.

முற்பகல் 9-45

திரு. ஆர். பி. பரமசிவம்: தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் ஒரு குட்டி ஜப்பான் நாடாக வளர்ச்சியடைய வேண்டும் என்பது இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய அவா. ஆகவே, இந்தத் தொழில் நகரத்தில் ஜப்பான் நாட்டுடைய அந்தத் தொழில் நுணுக்கத்தைப் பயன்படுத்தி அந்தத் தொழில் நகரம் அமைக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து பரிசீலிக்கப்படும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூரில் அமையவிருக்கும் மின்னணு நகரத்தில் மருத்துவத் துறையில் பயன்படுத்தப்பட்டு வரும் குறிப்பாக கிரிட்டிக்கல் கேர் யூனிட்டில் பயன்படுத்தப்பட்டு வரும் பிளட் கேஸ் அனலைசர், வென்டிலேட்டர்ஸ் மற்றும் அல்டிரா சோனோகிராம் ஆகிய கருவிகளை உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னது போல் இந்த எலக்ட்ரானிக் சிட்டியில் கம்ப்யூட்டர்கள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், அதாவது கண்ட்ரோல் டிவைசஸ் போன்றவைகள், பலதரப்பட்ட மின்னணு பாகங்கள் ஆகியவற்றைத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது எழுப்பியுள்ள பொருட்களை அங்கே தயாரிக்க முடியுமா என்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

1992 செப்டம்பர் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூரில் அமையவிருக்கும் மின்னணு நகரத்தில் தமிழ்நாடு முழுவதும் படித்து வேலையில்லாதப் பட்டதாரிகளுக்கு அங்கு வேலை வாய்ப்பு கிடைக்கிற விதத்தில் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு தொழில் துவங்கு வதற்கு நிதியும், உதவியும் அளிக்கத் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்னணு நகரம் என்பது ஒரு ஸ்பெஷலைஸ்டு பீல்ட். ஏற்கெனவே நான் சொன்னது போல 10 ஆயிரம் பேர்களுக்கு அங்கு வேலை வாய்ப்பு கொடுக்க வாய்ப்புள்ளது. எனவே, தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

23—

பரிசுச்சீட்டு விற்பனையை அதிகரிக்க சிறப்புத் திட்டம்.

*9942—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகள் (லாட்டரி) விற்பனை குறைவாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பரிசுச் சீட்டுகள் விற்பனையை அதிகரிக்க சிறப்புத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்..

(ஆ) பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிப்பதற்கான வழி வகைகளை ஆராய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி அரசு அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப் பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS